செ.வெ.எண்: 47 நாள்:24.05.2021

# கோயம்புத்தூர் மாவட்டத்தில் 18 வயது முதல் 44 வயதுள்ளவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்ட விவரம்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18-44 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (20.05.2021) அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 18வயது முதல் 44 வயதுக்குட்பட்டோருக்கான கொரோனா தொற்றுத் தடுப்பூசிகள் முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் அத்தியாவசியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

**அதனடிப்படையில்,**

| | | |
|---|---|---|
| 1. | 22.05.2021 அன்று 18-44 வயதிற்குட்பட்ட தொழிற்சாலை பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகள் எண்ணிக்கை | 9464 |
| 2. | 23.05.2021 அன்று 18-44 வயதிற்குட்பட்ட தொழிற்சாலை பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகள் எண்ணிக்கை | 8480 |
| 3. | **இன்று (24.05.2021) வழங்கப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை** | 9920 |
| | **மொத்தம்** | **27,864** |

என தற்போது வரை கோயம்புத்தூர் மாவட்டத்தில் 27,864 நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 18-44 வயதிற்குட்பட்டோருக்கான கொரோனா தொற்று தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. 45 வயதிற்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றவுடன் தொடர்ந்து வழங்கப்படும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**